# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1262/32 - 2002 නොවැම්බර් 15 වැනි සිකුරාදා - 2002.11.15

*1262/32 ஆம் இலக்கம் – 2002 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டம்**

1995 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 24அ என்னும் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்

செயலாளர்,<br>
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

2002.09.01

**கட்டளைச் சட்டம்**

1. இக்கட்டளைச் சட்டம் 2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழக கணனிக் கற்கைப் பிரிவு கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். அத்துடன் 2002.09.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

2. கணனிக் கற்கைப் பிரிவு (இதனகத்துப் பின்னர் "கற்கைப் பிரிவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் (இது "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இணைந்திருத்தல் வேண்டும்.

3. கற்கைப்பிரிவானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (இதனகத்துப் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமையப் பின்வரும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) மாணவர்களை அனுமதிப்பதற்கு;

(ஆ) கற்கைப் பிரிவினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின்மீது, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கணனி அறிவியல், தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்களின் கிளைகளில் போதனைக்கும் பயிற்சிக்கும் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் உசாத்துணைக்கும் ஏற்பாடு செய்வதற்கு;

(இ) கணனி அறிவியல், தகவல், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்கள் என்பவற்றில் தேர்ச்சி பெற்றுள்ள ஆட்களை ஆய்ந்தறியும் நோக்கத்திற்கு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடத்துவதற்கும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்தும் துணைவிதிகளில் விதித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய வேறு நிபந்தனைகளைத்

திருப்திப்படுத்தியும் ஆட்களையும் பல்கலைக்கழகத்தின் சட்டங்களினதும் திப்ளோமாக்களினதும் சான்றிதழ்களினதும் அத்துடன் ஏனைய கல்விசார் சாதனைகளினதும் அளிப்புக்கும் தகுதியுடைய ஆட்களையும் பல்கலைக்கழகத்திற்கு விதப்புரை செய்வதற்கும்;

(ஈ) அவசியமானவிடத்து பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனும் ஆணைக்குழுவின் ஒருங்கிணைப்புடனும் கணனி அறிவியலிலும் தகவல், தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்களிலும் அளிக்கப்படவுள்ள பட்டங்களையும் திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் அத்துடன் வேறு கல்விசார் சாதனைகளையும் தீர்மானிப்பதற்கும்;

(உ) கற்கைப்பிரிவின் குறிக்கோள்களையொத்த அல்லது கணிசமானளவு அக்குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களையுடைய இலங்கையில் அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் அத்துடன் கல்விமான்களையும் பரிமாறுதல் மூலம் அல்லது வேறு வகையில் ஒத்துழைப்பதற்கும்;

(ஊ) கற்கைப்பிரிவிற்கு அனுமதி கோரும் ஆட்கள் சித்தியடைந்த பரீட்சைகளையும், பயின்ற கற்கை காலங்களையும் அல்லது பல்கலைக்கழகங்களில் மேற்கொண்ட கற்கைகளையும் பல்கலைக்கழக மட்டத்தில் கற்கும் இடங்களையும் சட்டத்தினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பரீட்சைகளுக்கு கற்கையின் அல்லது கற்கைப்பிரிவின் படிப்பின் காலப் பகுதிக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் சமமானதாக இருப்பதாக அங்கீகரிக்கப்பதற்காக பல்கலைக்கழகத்தின் மூதவைக்கு விதப்புரை செய்வதற்கும், ஏதேனும் நேரத்தில் அத்தகைய அங்கீகாரத்தை மீளப்பெறுவதற்கும்;

(எ) பல்கலைக்கழகத்தின் அனுமதியுடன் கற்கைப்பிரிவுடன் தொடர்புடையதான அத்தகைய போதனையின், பயிற்சியின், ஆராய்ச்சியின், அபிவிருத்தியின் அல்லது உசாத்துணையின் நோக்கங்களுக்காக நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் அத்துடன் வேறு கட்டிடங்களையும் நிறுவுவதற்கும் பெறுவிப்பதற்கும் பேணுவிப்பதற்கும்;

(ஏ) கற்கைப்பிரிவின் நோக்கத்திற்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய கற்பித்தல், நிருவாக மற்றும் வேறு பதவிகளை உருவாக்குவதனை விதப்புரை செய்வதற்கும் அத்துடன் அவற்றை ஒழிப்பதற்கு அல்லது இடைநிறுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும்;

(ஐ) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களையும், புலமைப் பரிசில்களையும், புலமைப் பொருளுதவிகளையும், ஏழைக்கல்வி உதவிகளையும் பதக்கங்களையும் அத்துடன் வேறு பரிசுகளையும் அமைத்துருவாக்குவதற்கும் அளிப்பதற்கும்;

(ஒ) கற்கைப்பிரிவுக்கு வெளியே கற்கைப் பயிற்சி நெறிகளை அல்லது அத்தகைய கற்கைப் பயிற்சி நெறிகளின் பாகங்களை, அவற்றை ஏற்பாடுசெய்யுமாறு தேவைப்படுத்தும் ஏதேனும் துணை விதிகளுக்கிணங்க நடத்துவதற்கு ஒழுங்கு செய்வதற்கு;

(ஓ) அரசாங்கக் கொள்கைக்கும், கட்டணத்தைத் தேவைப்படுத்தும் ஏதேனும் விதிகளுக்கிணங்கவும் கட்டணங்களைக் கோருவதற்கும், பெறுவதற்கும்; அத்துடன்

(ஔ) கற்கைப்பிரிவின் குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கும் மேற்கூறப்பட்ட தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் இடைநேர்விளைவான அல்லது அவற்றின் விளைவாந்தன்மையான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்வதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. கற்கைப்பிரிவு பின்வருவதனைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(1) முகாமைச் சபை;

(2) கல்விசார் கூட்டவை;

(3) கற்கைச் சபை;

(4) கற்கைப் பகுதிகள்;

(5) நிலையங்கள்; அத்துடன்

(6) கற்கைப் பிரிவின் அதிகார சபைகளாக இருப்பதற்கென கட்டளைச் சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுமங்கள்.

5. கற்கைப் பிரிவு பின்வரும் அலுவலர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(i) பணிப்பாளர்;
(ii) பிரதிப் பணிப்பாளர்
(iii) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, பதவியொன்றாக கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

6. (1) கற்கைப்பிரிவின் முதலாவது பணிப்பாளர் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் விதப்புரையின் மீது பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு பணிப்பாளரும் முகாமைச் சபையால் விதந்துரைக்கப்பட்ட மூன்று ஆட்களைக் கொண்ட குழாமொன்றிலிருந்து பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

ஆயின் எவ்வாறாயினும் ஆளெவரும் தொடர்ச்சியாக இரண்டு தவணைகளுக்குமேல் பணிப்பாளராக நியமிக்கப்படுதலாகாது;

ஆயின், மேலும் பணிப்பாளரின் நியமனத்துக்கு ஆணைக்குழுவின் ஒருப்பாடு பெறப்படுதல் வேண்டும்.

(2) பணிப்பாளர், அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது (3) ஆம் உட்பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி,அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவர் அவரது அறுபத்தைந்து வயதைப் பூர்த்தி செய்யும்வரை

அதாவது இவற்றுள் எது முன்னராக நிகழ்கின்றதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பணிப்பாளர் அத்தகைய நோக்கத்திற்கென கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது பேரவையால் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும்.

(4) பதவி விலகிய அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட பணிப்பாளர் ஒருவர் பணிப்பாளராக அவரது நியனமத்திற்கு உடன் முன்னய உயர் கல்வி நிறுவகமொன்றின் பணியாட்டொகுதிக்கு உறுப்பினர் ஒருவராக இருந்திருப்பின், அத்தகைய உயர் கல்வி நிறுவகத்தில் அவரது நிலையான பதவிக்குத் திரும்பச் செல்லலாம். ஆயின் அவர் சட்டத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஓய்வு பெறும் வயதினை அடைந்திராதவராக இருந்திருத்தல் வேண்டும்.

(5) பணிப்பாளர், சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதுக்கள் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, துணைவேந்தர் அத்தகைய இயலாமை ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள் பணிப்பாளரின் கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்கு பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரையில் பிரதிப் பணிப்பாளர் பதவியின் அன்றாட கடமைகளைக் கொண்டு நடாத்துதல் வேண்டும்.

(6) பணிப்பாளரின் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், துணைவேந்தர் அத்தகைய வெற்றிடம் ஏற்பட்ட ஏழு நாட்களுக்குள், பணிப்பாளரின் பதவிக்கான கடமைகளைக் கொண்டு நடாத்துவதற்குப் பொருத்தமானதென அவர் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும் வரையில் பிரதிப் பணிப்பாளர் பணிப்பாளரின் கடமைகளைப் புரிதல் வேண்டும்.

7. (1) பணிப்பாளர் கற்கைப் பிரிவின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்விசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். இவர் கற்கைப் பிரிவின் முகாமைச் சபையினதும் கல்விசார் கூட்டவையினதும் எல்லாக் கற்கைச் சபைகளினதும் பதவிவழி உறுப்பினரொருவராதல் வேண்டும். இவர் கற்கைப் பிரிவின் வேறெந்த அதிகார சபையினதும் அல்லது குழுவினதும் கூட்டத்தில் சமுகமாயிருப்பதற்கும் அதில் உரையாற்றுவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும். ஆனால் அவர், அத்தகைய வேறேதேனும் அதிகார சபையின் அல்லது குழுவின் உறுப்பினரொருவராக இருந்தாலன்றி ஏதேனும் அத்தகைய கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராதல் ஆகாது.

(2) சபையால் அதன் சார்பில் காலத்துக்குக் காலம் சட்டமுறையாகத் தமக்கு வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, கட்டளைச் சட்டத்தினதும் அத்துடன் வேறு ஏதேனும் சாதனத்தினதும் எற்பாடுகள், அவை கற்கைப் பிரிவைத் தொடர்புறுத்தும் அளவுக்கு, முறையாக அனுசரிக்கப்படுவதை உறுதிப்படுத்துவது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன், அவர் அந்நோக்கத்திற்கு அவசியமானதென அவர் கருதப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தலும் வேண்டும் என்பதுடன், அவற்றையும் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையின் முடிபுகளுக்குப் பயனளிப்பது அல்லது பயனளிக்கச் செய்விப்பது பணிப்பாளரது கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் கற்கைப் பிரிவின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

(5) பணிப்பாளர், பல்கலைக்கழகத் துணைவேந்தரின் பணிப்பின்கீழ், கற்கைப் பிரிவிற்குள் ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும். ஒழுக்காற்று தொடர்பிலான எவையேனும் துணைவிதிகள் இல்லாதவிடத்து பல்கலைக்கழகத்தின் தோதான துணை விதிகளும் வேறு விதிகளும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

8. (1) பிரதிப் பணிப்பாளர், முகாமைச் சபையின் விதிப்புரையின்மீது துணைவேந்தரால் கற்கைப் பிரிவின் பகுதி தலைவர்களிடையேயிருந்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரதிப் பணிப்பாளர் (3) ஆம் உட்பந்தியின்கீழ் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்கு அல்லது அவரது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்தி செய்யும்வரை அதாவது இவற்றுள் எது முந்தியதோ அதுவரை பதவி வகித்தல் வேண்டும்.

(3) பிரதிப் பணிப்பாளர், அந்நோக்கத்திற்கெனக் கூட்டப்பட்ட விசேட கூட்டமொன்றில் முகாமைச் சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலிரண்டிற்கு குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டன வாக்கொன்றின்மீது பேரவையால் சபையிலிருந்து அகற்றப்படலாம்.

(4) பிரதிப் பணிப்பாளரின் கடமைகளும் பணிகளும் முகாமைச் சபையால் தீர்மானிக்கப்பட்டவாறாதல் வேண்டும்.

9. முகாமைச் சபை (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) கற்கைப் பிரிவின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாதல் வேண்டும் என்பதுடன் அது பின்வருவோரைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(1) எட்டு பதவி வழி உறுப்பினர்கள், அதாவது-

(அ) பணிப்பாளர், இவர் தவிசாளராதல் வேண்டும்.
(ஆ) பிரதிப் பணிப்பாளர்
(இ) பல்கலைக்கழகக் கல்வி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்.
(ஈ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர்.
(உ) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத் துறையின் தலைவர்
(ஊ) கற்கைப் பிரிவுப் பகுதிகளின் தலைவர்கள், அத்துடன்

(2) வேறு பதினொரு உறுப்பினர்கள், அதாவது-

(அ) பல்கலைக்கழகப் பேரவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.
(ஆ) பல்கலைக்கழக மூதவையால் அதன் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்டு, பல்கலைக்கழகப் பேரவையால் நியமதிக்கப்பட்ட இரண்டு பிரதிநிதிகள்.
(இ) ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.
(ஈ) தகவல் தொழில்நுட்பவியல் கைத்தொழிலைப் பிரதிநித்துவப்படுத்துவதற்கு துணைவேந்தரின் விதப்புரையின்மீது பல்கலைக்கழகப் பேரவையால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள். அத்துடன்
(உ) கல்விசார் கூட்டவையால் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

10. (1) பணிப்பாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். சபையில் ஏதேனும் கூட்டத்தில் பணிப்பாளர் சமுகமாயில்லாதவிடத்து, பிரதிப் பணிப்பாளர் தலைமை தாங்குதல் வேண்டும். பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர் ஆகிய இருவரும் சமுகமாயில்லாதவிடத்து, சபை உறுப்பினர்கள், அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதற்கென சமுகமாயிருக்கும் உறுப்பினர்களிடையேயிருந்து எவரேனும் உறுப்பினரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி, அவரது பெயர் குறித்த நியமனத்தின் அல்லது நியமனத்தின் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு உறுப்பினரொருவராகப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி பெயர் குறித்த மீள் நியமனத்திற்கு அல்லது மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராக முடியும்.

ஆயின் எவ்வாறாயினும், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் அவரது தவணை முடிவுறுவதற்கு முன்னர் அவரது பதவியை வறிதாக்குவாராயின் அவரது பின்னுறுபவர், அவரது பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி அவரது முன்னுறுபவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

ஆயின் மேலும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒவ்வொருவரும் எந்த அந்தஸ்தின் பயனைக்கொண்டு அவர் சபையின் உறுப்பினரொருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை அவர் வகிக்கின்றவரை பதவிவகித்தல் வேண்டும்.

(3) சபையின் உறுப்பினராகப் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் விடயத்திற்கேற்ப, ஆணைக்குழுவின் தவிசாளருக்கு அல்லது துணைவேந்தருக்கு முகவரியிட்டனுப்பப்படும் எழுத்திலான வேண்டுகோளொன்றினால் அவரது பதவியைத் துறுக்கலாம்.

(4) லீவுக்கான அனுமதி இல்லாமல் தொடர்ச்சியாக சபையின் மூன்று கூட்டங்களுக்கு வருகை தரத் தவறுகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினர் ஒருவராக அவரது பதவியை வறிதாக்கியுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதன் விளைவாக ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கு, நியமிக்கும் அதிகாரி பொருத்தமான ஆளொருவரை நியமித்தல் வேண்டும்.

(5) சபையின் உறுப்பினர் ஒருவருக்கு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிகள் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் ஒன்றிற்குக் குறையாத சிறிய எண்ணிக்கையாதல் வேண்டும்.

(7) சபை அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயினும் அது ஒவ்வோராண்டிலும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(8) பணிப்பாளர், அவசியமானதென அவர் கருதுகின்றபோது அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டிற்குக் குறையாதோரால் எழுத்திலான வேண்டுகோள் ஒன்று அவருக்குக் கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய வேண்டுகோள் அத்தகைய விசேட கூட்டத்தின் நோக்கத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. (1) சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய சபை பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) கற்கைப் பிரிவின் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தை வைத்திருப்பதற்கு, கட்டுப்பத்துவதற்கு அத்துடன் நிருவகிப்பதற்கு;

(ஆ) சட்டத்தினதும் வேறு ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாட்டிற்கிணங்க கற்கைப்பிரிவு தொடர்பான எல்லா கருமங்களையும் ஒழுங்குபடுத்துவதற்கும் தீர்மானிப்பதற்கும்;

(இ) கற்கைப் பிரிவிற்கு அதன் பொது நிருவாகத்திற்கெனவும் முகாமைக்கெனவும் அத்துடன் வேறு ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கெனவும் கிடைக்கச் செய்யப்பட்ட நிதியை நிருவகிப்பதற்கும் கட்டுப்படுத்துவதற்கும்;

(ஈ) கற்கைப் பிரிவிற்குச் செய்யப்படும் அசைவற்ற அல்லது அசைவுள்ள ஆதனத்தின் மரணசாதனக் கையளிப்புகள், நன்கொடைகள் வேறு மானியக்கொடை என்பவற்றை ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் பெறுவதற்கும் ஏற்றுக்கொள்வதற்கும்;

(உ) கற்கைப்பிரிவின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் மதிப்பீடு செய்வதற்கும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும்;

(ஊ) தேவைப்படுத்தப்பட்ட நிதியாண்டிற்கு கற்கைப்பிரிவின் மதிப்பீடுகளைத் தயாரிக்கச் செய்வித்தலும் அது அங்கீகரிக்கப்படுவதன்மீது அத்தகைய மதிப்பீடுகளை பல்கலைக்கழகத்திற்கும் ஆணைக் குழுவுக்கும் சமர்ப்பிப்பதற்கும்;

(எ) கணனி அறிவியலிலும் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல்களிலும் அளிக்கப்படவேண்டிய பட்டங்களையும் திப்ளோமாக்களையும், சான்றிதழ்களையும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களையும், மற்றும் பின்பற்றப்படவேண்டிய பாடநெறியையும் பயிற்சிகளையும் சித்தியடையவேண்டிய பரீட்சைகளையும் அத்தகைய சான்றிதழ்களுக்கும் வேறு கல்விசார் சிறப்புப் பட்டங்களுக்கும் தகைமைபெற விரும்பும் மாணவர்களால் திருப்திப்படவேண்டிய வேறு நிபந்தனைகளையும் கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்கு விதந்துரை செய்வதற்கும் ;

(ஏ) எக்கருமம் தொடர்பில் துணை விதிகள் அல்லது விதிகள் ஆக்கப்படுவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமம் எதற்கும் துணை விதிகளை அல்லது விதிகளை ஆக்குவதற்கு ;

ஆயின், எவ்வாறாயினும், பாடநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பிலான துணை விதி அல்லது விதி எதுவும் கல்விசார் கூட்டவையில் இருந்து பெற்ற அறிக்கையைப் பரிசீலனை செய்த பின்னர் தவிர, ஆக்கப்படுதலாகாது.

(ஐ) கற்கைப் பிரிவின் பணியைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான கட்டிடங்களையும் வளவுகளையும் தளபாடங்களையும் உபகரணங்களையும் வேறு பொருள்களையும் ஏற்பாடு செய்வதற்கும் ;

(ஒ) பல்கலைக்கழகத்திற்கு –

(i) கற்பித்தல், நிருவாகப் பதவிகளை உள்ளடக்கிய கற்கைப் பிரிவின் நோக்கங்களுக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பதவிகளை உருவாக்குதலையும் அத்தகைய பதவிகளை ஒழிப்பதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் ; அத்துடன்

(ii) கற்கைப் பிரிவிற்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்களிடமும் அலுவலர்களிடமும் வேறு ஊழியர்களிடமும் தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளையும் ;

(iii) அவசியமானவிடத்து கற்கைப் பிரிவின் ஊதியத்துக்கமர்த்தப்பட்டுள்ள ஆட்களை இடைநிறுத்துவதற்கு, பதவி நீக்குவதற்கு அல்லது வேறு வகையில் தண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் ;

(iv) கற்கைப் பிரிவின் ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடைய ஆட்களையும் விதப்புரை செய்வதற்கும் ;

(ஓ) பொருத்தமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையினதான நிலையியற் குழுக்களை அல்லது வேளைக்கேற்ற குழுக்களை நியமிப்பதற்கும் ; அவர்களின் பணித்துறையின் நியதிகளைக் குறித்துரைப்பதற்கும், அவரது அறிக்கைகளைப் பரிசிலனை செய்வதற்கும், அத்தகைய அறிக்கைகளை திரிவுபடுத்துதல்களுடனோ அல்லது திரிபுபடுத்தலில்லாமலோ அங்கீகரிப்பதற்கும் அல்லது அத்தகைய அறிக்கைகளை நிராகரிப்பதற்கும் ;

(ஔ) சட்டத்தின் 15 ஆம் பிரிவின் (vii) ஆம் பந்தியின் கீழ் ஆணைக்குழுவால் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைத் தவிர்த்து, பாடநெறிகளுக்கு மாணவர்களின் அனுமதிப்புக்கான தேவைப்பாடுகளை, கல்விசார் கூட்டவையுடனான கலந்தாலோசனையுடன் பல்கலைக்கழகத்தினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடன் தீர்மானிப்பதற்கும் ;

(க) பிரயோகிக்கப்படாத ஏதேனும் வருமானம் உட்பட, கற்கைப் பிரிவுக்குரிய பணத்தை நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாட்டின் நியதிகளின்படி எந்தப் பிணயத்தில் நம்பிக்கைப் பொறுப்புப் பணத்தை முதலீடு செய்வது சட்டமுறையானதோ அந்த ஏதேனும் நம்பிக்கைப் பொறுப்பில் முதலீடு செய்வதற்கும் ; அல்லது ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எவையேனும் அத்தகைய பணத்தை இலங்கையில் அசைவற்ற ஆதனத்தின் கொள்வனவில் முதலீடு செய்வதற்கும் அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்துவதற்கும் அல்லது உடனடியான செலவினத்திற்குத் தேவைப்படாத அத்தகைய பணத்தின் ஏதேனும் பாகத்தை, ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பீட்டில் வைப்பதற்கும் ; அத்துடன்

(ச) இக்கட்டளைச் சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கற்கைப் பிரிவின் தத்துவங்களுக்கு இடைநேர் விளைவான அல்லது அதன் விளைவாந் தன்மையதான கற்கைப் பிரிவின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகிப்பதற்கும் ;

(2) ஏதேனும் கல்விசார் கருமம் தொடர்பிலான தீர்மானம் எதுவும், கல்விசார் கூட்டவைக்கு அதன்மீது அதன் அபிப்பிராயத்தைப் பதிவு செய்து சபைக்கு அனுப்புவதற்கான வாய்ப்பொன்று முன்னரே வழங்கப்பட்டாலன்றி சபையால் நிறைவேற்றப்படுதலாகாது :

ஆயின் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஏதேனும் தீர்மானம் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனன்றி செயற்படுதலாகாது.

இப்பந்தியில் "கல்விசார்கருமம்" என்பது கல்விசார் கூட்டவையின் கட்டுப்பாட்டிற்கும் பொதுப் பணிப்பிற்கும் அமைந்த ஏதேனும் கருமம் என்று பொருள்படும்.

12. (1) பின்வரும் ஆட்களைக் கொண்ட கல்விசார் கூட்டவையொன்றிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; (இவர் தவிசாளராதல் வேண்டும்) ;

(ஆ) ஒவ்வொரு கற்கைப் பகுதியினதும் தலைவர் ;

(இ) ஒவ்வொரு கற்கைச் சபையினதும் நியமித்தர் ஒருவர் ;

(ஈ) ஒவ்வொரு நிலையத்தினதும் இணைப்பாளர்கள் அல்லது அவர்களின் நியமத்தர்கள் ;

(உ) சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட பல்கலைக்கழக விஞ்ஞான துறையின் துறைச் சபையின் நியமத்தர் ஒருவர் ;

(ஊ) தகவல் தொழில்நுட்பவியல் கைத்தொழிலைப் பிரதிநித்துவப்படுத்துவதற்கு சபையின் விதப்புரையின்மீது துணைவேந்தரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(எ) கற்கைப் பிரிவின் ஒவ்வொரு கற்கைத் துறையிலிருந்து சிரேஷ்ட பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் அத்துடன் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் ;

(ஏ) மேலே (எ) என்பதிலுள்ள உறுப்பினர்களைத் தவிர்த்து, கற்பித்தலில் ஈடுபட்டுள்ள கற்கைப் பிரிவின் நிரந்தரப் பணியாட்தொகுதியிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்.

(2) கல்விசார் கூட்டவை, சபையுடனான ஒருப்பாட்டுடன், குறித்துரைக்கப்பட்டவொரு நோக்கத்திற்கும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கும் ஒரு ஆளை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை இணைத்துக்கொள்ளலாம் ; ஆனால் அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட ஆள் எவரும் தேர்தலுக்கு நிற்பதற்கோ அல்லது கல்விசார் கூட்டவையின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரிமையுடையவராதலாகாது.

(3) பந்தி 10 என்பதன் (2) ஆம் (3) ஆம் (4) ஆம் உட்பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்ற மாற்றங்களுடன் கல்விசார் கூட்டவையின் நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நிறமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) கல்விசார் கூட்டவையின் கூட்டமொன்றிற்கான கூட்டநடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலிரண்டிற்குக் குறையாத சிறிய எண்ணிக்கையாதல் வேண்டும் ;

(5) கல்விசார் கூட்டவை, அவசியமானபோது கூடுதல் வேண்டும், எவ்வாறாயினும், ஒவ்வொராண்டும் பத்துத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும் ;

(6) கல்விசார் கூட்டவையின் உறுப்பினர் ஒருவருக்கு ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறான அத்தகையபடிகள் செலுத்தப்படுதல் வேண்டும் ;

13. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கல்விசார் கூட்டவையானது, கற்கைப்பிரிவின் போதனை, பயிற்சி, ஆராய்ச்சி அத்துடன் பரீட்சைகள் என்பன மீது கட்டுப்பாட்டின் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(2) கல்விசார் கூட்டவையானது, (1) ஆம் உட்பந்தியால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி-

(அ) சபையால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தைப் பரிசீலனை செய்து அறிக்கையிடுதலும் ;

(ஆ) பாடநெறிகள், கற்பித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் அல்லது பரீட்சைகள் அல்லாத விடயங்கள் மீது சபைக்கு விதப்புரைகளும் அறிக்கைகளும் சமர்ப்பித்தலும் ;

(இ) ஏதேனும் விசேட பாடம் அல்லது பாடங்கள் பற்றி பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்திற்காக கூட்டவையின் உறுப்பினர்கள் அல்லாத ஆட்களை உள்ளடக்கக்கூடிய குழுக்களை நியமித்தலும் ;

வேண்டும்.

(ஈ) சபைக்கு –

(i) பாடநெறிகளுக்கும், பரீட்சைக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளையும் ;

(ii) ஆசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமான ஆட்களையும் ;

(iii) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்து விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தி பட்டங்களின், திப்ளோமாக்களின், சான்றிதழ்களின் அத்துடன் வேறு கல்விசார் சாதனைகளின் அளிப்புக்குத் தகுதியுடைய ஆட்களையும் ;

(iv) ஆராய்ச்சிப்படிப்புப் பரிசில்களுக்கும் புலமைப் பரிசில்களுக்கும் புலமைப் பொருளுதவிகளுக்கும் ஏழைக்கல்வியுதவிகளுக்கும் பதக்கங்களுக்கும் வேறு பரிசுகளுக்கும் போட்டி முறைகளையும் நிபந்தனைகளையும் ;

(v) ஆராய்ச்சிப் படிப்புப் பரிசில்களதும், புலமைப்பரிசில்களதும், புலமைப் பொருளுதவிகளதும் ஏழைக்கல்வியுதவிகளதும் பதக்கங்களினதும் வேறு பரிசுகளினதும், அளிப்புக்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களையும்.

விதப்புரை செய்தலும் வேண்டும் ; அத்துடன்

(உ) இக்கட்டளைச் சட்டத்தில் அல்லது வேறு ஏதேனும் தோதான சாதனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு கற்கைப் பிரிவின் தத்துவங்களுக்கு இடைநேர்விளைவான அல்லது விளைவாந்தன்மையினதான கல்விசார் விடயங்கள் தொடர்பில் கற்கைப்பிரிவின் வேறு எல்லாத் தத்துவங்களையும் பிரயோகித்தலும் வேண்டும்.

14. (1) பின்வருவன தொடர்பில் கற்கைச் சபைகள் இருத்தல் வேண்டும் :-

(அ) ஆராய்ச்சியும் உயர்தரப் பட்டங்களும் ;

(ஆ) உள்வாரிப் பட்டதாரி மாணவப் பட்டங்கள் : அத்துடன்

(இ) வெளிவாரி மற்றும் விசாலித்த நிகழ்ச்சித்திட்டங்கள்.

(2) பல்கலைக்கழகத்தால், சபையின் விதப்புரையின்மீது ஆணைக்குழுவுடனான ஒருப்பாட்டுடன் உருவாக்கப்படக் கூடியவாறான மேலதிக கற்கைச் சபைகள்.

(3) கற்கைச் சபை ஒவ்வொன்றும் பணிப்பாளர் ஒருவரைத் தலைவராகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(4) கற்கைச் சபைகளின் உறுப்பினர்களுக்குச் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

15. (1) ஆராய்ச்சி மற்றும் உயர்தரப் பட்டங்கள் தொடர்பிலான கற்கைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் (இவர் தவிசாளராதல் வேண்டும்) ;

(ஆ) பகுதி ஒவ்வொன்றினதும் தலைவர் ;

(இ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, பட்டப்பின் கற்கை கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிலையங்களின் இணைப்பாளர்கள்;

(ஈ) பகுதி ஒவ்வொன்றினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் ; அத்துடன் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் அல்லது பட்டப்பின் கற்கையைக் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள நிலையம் ஒவ்வொன்றினாலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் ;

(உ) இனம் காணப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றையும் இணைப்பதற்கு கல்விசார் கூட்டவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

(2) உள்வாரிப் பட்டதாரி மாணவப்பட்டங்கள் தொடர்பிலான கற்கைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ; இவர் தவிசாளராதல் வேண்டும் ;

(ஆ) பகுதி ஒவ்வொன்றினதும் தலைவர் ;

(இ) எல்லா நிரந்தர ஆசிரியர்களும் ;

(ஈ) கற்கைப்பிரிவில் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களான விஞ்ஞான துறையின் உறுப்பினர்களிடையேயிருந்து பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான விஞ்ஞான துறையின் துறைச் சபையின் உறுப்பினர் ஒருவர் ;

(உ) பட்டதாரி மாணவர்களுக்குக் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள எல்லா நிரந்தரப் போதனாசிரியர்களும் ;

(ஊ) கற்கைப்பிரிவுடன் பதிவு செய்யப்பட்டுள்ள உள்வாரிப் பட்டதாரி மாணவர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாணவர்கள்.

(3) இரண்டாம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியின் கீழ் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், ஒரு கல்வியாண்டிற்கு உறுப்பினரொருவராகப் பதவி வகித்தல் வேண்டும். ஆயின், அவர் பதிவு செய்யப்பட்ட உள்வாரிப்பட்டதாரி மாணவராகத் தொடர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர், பரீட்சைகள் மற்றும் அது தொடர்புடைய கருமங்கள் தொடர்பாக கற்கைச் சபையின் ஏதேனும் கூட்டத்தின் நடவடிக்கைகளிலிருந்து நீக்கம் செய்யப்படுதல் வேண்டும், என்பதுடன் அத்தகைய கூட்டம் எதுவும், அத்தகைய நீக்கம் எவ்வாறிருப்பினும் முறையாக நடைபெற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) வெளிவாரி மற்றும் விசாலிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பிலான கற்கைச் சபை பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் (இவர் தவிசாளராதல் வேண்டும்) ;

(ஆ) நிலையம் ஒவ்வொன்றினதும் இணைப்பாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(இ) கற்கைப் பகுதி ஒவ்வொன்றிலுமிருந்து நியமித்தர் ஒருவர் ;

(ஈ) உள்வாரி மற்றும் வெளிவாரி நிகழ்ச்சித்திட்டம் ஒவ்வொன்றையும் இணைப்பதற்கு கல்விசார் கூட்டவையால் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.

16. (1) கற்கைச் சபை ஒவ்வொன்றும் செயலாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டும். இவர் அதன் நிரந்தர ஆசிரியர்களிடையேயிருந்து தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஏதேனும் கற்கைச் சபையின் கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் இணைத்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் எவருமிருப்பின் அவர்கள் நீங்கலாக அதன் மொத்த உறுப்பாண்மையின் மூன்றிலொன்றிற்குக் குறையாத சிறிய எண்ணிக்கையாதல் வேண்டும்.

(3) கற்கைச் சபை ஒவ்வொன்றும் அவசியமானபொழுது கூடுதல் வேண்டும். ஆயின் ஒவ்வோராண்டிலும் பத்து தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(4) கற்கைச் சபை ஒவ்வொன்றும், கல்விசார் கூட்டவையின் ஒருப்பாட்டுடன் குறித்துரைக்கப்பட்டவொரு நோக்கத்திற்கும் குறித்துரைக்கப்பட்டவொரு காலப்பகுதிக்கும் ஆளொருவரை அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களை இணைத்துக்கொள்ளலாம் ; ஆனால் அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளெவரும் கற்கைச் சபையின் கூட்டம் எதிலும் தேர்தலில் நிற்றலோ அல்லது வாக்களித்தலோ ஆகாது.

17. (1) பின்வரும் பிரிவுகள் தொடர்பில் கற்கைப் பகுதி இருத்தல் வேண்டும் :-

(அ) தகவல் முறைமைத் தொழில்நுட்பவியல் ;

(ஆ) கணிப்பு மற்றும் நுண்மதி முறைமை ;

(இ) தொடர்பாடல் மற்றும் ஊடகத்தொழில்நுட்பவியல்.

(2) பல்கலைக்கழகத்தினால் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் சபையின் விதப்புரையின் மீது புதிய கற்கைப்பகுதிகள் உருவாக்கப்படலாம்.

(3)(அ) கற்கைப் பகுதி ஒவ்வொன்றும் சிரேஷ்ட பேராசிரியரொருவராக இருக்க வேண்டிய பகுதித் தலைவரையும் வேறு பேராசிரியரையும் இணைப் பேராசிரியரையும் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளரையும் கொண்டிருத்தல் வேண்டும். அத்தகைய சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப்பேராசிரியர் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர் ஒவ்வொருவரும் துணைவேந்தரின் விதப்புரையின் மீது பேரவையால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பகுதியொன்றின் தலைவர் ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கமைய, அவரது நியமனத் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட மூன்று ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன், பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீள் நியமனத்திற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும். பகுதித் தலைவர் ஒவ்வொருவருக்கும் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

(இ) பகுதித் தலைவர் ஒருவர் அனுமதியுடனான லீவு, சுகயீனம் காரணமாக அல்லது வேறு ஏதுவினால் மூன்று மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு, அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதவராயிருக்குமிடத்து, அத்தகைய காலப்பகுதிக்கு பகுதித் தலைவரின் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கென பேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள் அல்லது சிரேஷ்ட விரிவுரையாளர்களிடையேயிருந்து சபை ஆளொருவரை நியமித்தல் வேண்டும். ஆயின், பகுதித்தலைவர் ஒருவர் ஓய்வுபெறுமிடத்து அல்லது பதவி துறக்குமிடத்து அல்லது வேறு காரணத்திற்காக அவரால் மூன்று மாதங்களை விஞ்சும் ஒரு காலப்பகுதிக்கு அவரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்ற இயலாதிருக்குமிடத்து, பகுதித் தலைவரின் பதவிக்கான வெற்றிடமொன்று இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் (அ) என்னும் பந்திக்கிணங்க பகுதியின் புதுத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுதலும் வேண்டும்.

18. (1) பின்வருவன தொடர்பில் நிலையங்கள் இருத்தல் வேண்டும் ;-

(அ) உயர்தர டிஜிட்டல் ஊடகத் தொழில்நுட்பவியல்

(ஆ) மின் - கற்கை

(இ) வெளிவாரிப்பட்டங்கள்

(ஈ) கணிப்புச் சேவைகள்

(உ) உயர்தொழிலியல் அபிவிருத்தி

(2) சபையின் விதப்புரையின்மீது பல்கலைக்கழகத்தால் ஆணைக்குழுவுடனான ஒருப்பாட்டுடன் அவசியப்படக்கூடியவாறான அத்தகைய வேறு நிலையங்கள் உருவாக்கப்படலாம்.

(3) அத்தகைய நிலையம் சபையால் நியமிக்கப்பட்ட இணைப்பாளர் ஒருவரைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், இவருக்கு சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு வேதனம் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) கற்கைப்பிரிவு நிலையத்தின் தலைவராக இருப்பதற்கென பணிப்பாளரை நியமித்தல் வேண்டும்.

19. கற்கைப்பிரிவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

20. (1) கற்கைப்பிரிவு, நிதியமொன்றை வைத்திருத்தல் வேண்டும். அதற்குள் அல்லது அவற்றிற்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :-

(அ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க கற்கைப் பிரிவிற்கு செலுத்தப்படும் எல்லாக் கட்டணங்களும் ;

(ஆ) பாராளுமன்றத்தால் வாக்களிக்கப்பட்டனவும் கற்கைப்பிரிவிற்கு மானியக்கொடையாக ஆணைக்குழுவால் செலவீடு செய்யப்பட்டவையுமான எல்லாப் பணமும் ;

(இ) கற்கைப் பிரிவின் வெளிவாரி அல்லது விசாலிக்கப்பட்ட செயற்பாடுகள் அத்துடன் சேவைகள் ஊடாக தோற்றுவிக்கப்பட்ட எல்லா வருமானமும்;

(ஈ) அறக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும்;

(உ) எத்தன்மைத்தானதுமான மூலத்திலிருந்து கற்கைப்பிரிவிற்குத் திரளும் அத்தகைய வேறு பணம்.

(2) மேற்கூறப்பட்ட வகுதிகள் ஒவ்வொன்றிலுமிருந்து பெறப்பட்ட வருமானம் புறம்பாக கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) குறிப்பிட்டவொரு மாதத்திற்குள் நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தையும் பொழிப்பொன்று தோதான வருமானத் தலைப்பின்கீழ் வகுக்கப்பட்டு அடுத்துறும் மாதத்தின் இறுதிக்கு முன்னர் பணிப்பாளரால் ஆணைக்குழுவுக்கு அதன் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

21. பின்வருவன பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் :-

(i) கற்கைப் பிரிவின் கணக்குகளை கட்டளைச்சட்டத்தால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் வைத்திருத்தல்;

(ii) நிதியத்தினுள் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தையும் பெறுதலும் அத்தகைய பணத்தை தகுந்த கணக்குத் தலைப்பில் வரவு வைத்தலும்;

(iii) அதிகாரமளிக்கப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளையும் செய்தல்; அத்துடன் ஆணைக் குழுவுக்குத் தேவையானவாறு எதிர்வரும் ஆண்டின் மதிப்பீடுகளையும் ஆண்டு நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்குத் தயாரித்தல்;

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக அல்லது குறித்துரைக்கப்பட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து செய்யப்பட்ட மானியக்கொடைகளிலிருந்து பெறப்பட்ட வருமானம் கற்கைப் பிரிவின் கணக்குகளில் புறம்பாக கணக்கீடு செய்யப்படவேண்டும் என்பதுடன் கற்கைப் பிரிவின் பொது நோக்கங்களுக்காக அல்லது அத்தகைய மானியக்கொடை அல்லது அறக்கொடைகள் எந்த நோக்கங்களுக்காக ஆக்கப்பட்டனவோ முறையே அந்த எவையேனும் நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் அல்லாத வேறு எவையேனும் நோக்கங்களுக்காக அல்லது குறிக்கோள்களுக்காக கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

22. (1) கற்கைப் பிரிவானது, ஆண்டுக் கணக்குக் கூற்றொன்றையும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆணைக்குழு காலத்துக்குக் காலம் குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்கள் அடங்கிய புள்ளிவிவரங்களையும் தயாரித்தல் வேண்டும்.

(2) கற்கைப் பிரிவின் கணக்குப் புத்தகங்கள் கற்கைப்பிரிவின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

23. உயர்கல்வி நிறுவனமொன்றின் கணக்குகளில் கணக்காய்வுக்கு இயல்பானவாறு சட்டத்தின் பாகம் XIII இன் அத்தகைய ஏற்பாடுகள் கற்கைப் பிரிவுக் கணக்கின் கணக்காய்வுக்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

24. (1) கற்கைப் பிரிவின் பணியாட்டொகுதியானது, கற்கைப்பிரிவின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் என்பவற்றைத் திறமையாகப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும் பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் அவசியமென அது கருதக்கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும், ஆசிரியர்களையும், மற்றும் வேறு ஊழியர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) கற்கைப்பிரிவின் பணியாட்டொகுதி, பல்கலைக்கழகத்தால் அதன் சொந்த பணியாட்டொகுதியிடையேயிருந்து விடுவிப்பின்மீது ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும் அல்லது விடயத்திற்கேற்ப ஆணைக்குழுவினால் அல்லது பல்கைக்கழகத்தால் நியமிக்கப்படுதல் வேண்டும். சட்டத்தின் பாகம் X இன் ஏற்பாடுகள் கற்கைப்பிரிவின் பணியாட்டொகுதிக்கான நியமனங்களுக்கும் அவை தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) பல்லைக்கழகத்தின் அலுவலர், ஆசிரியர் அல்லது ஊழியர் ஒருவர் கற்கைப்பிரிவின் சேவைக்கு முழுநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து, கற்கைப்பிரிவு அவருக்கு பல்கலைக்கழகத்தில் அவரது நிலையான பதவியின் சம்பளத்தையும் படிகளையும் செலுத்துதல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியர்களுக்கு அது பல்கலைக்கழகத்துடனான கலந்தாலோசனையுடனும் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறும் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படியைச் செலுத்தலாம்.

(4) கற்கைப்பிரிவின் பணியாட்டொகுதி பணிப்பாளரின் பணிப்பிற்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கும் அமைந்தோராதல் வேண்டும்.

(5) பல்கலைக்கழகத்தின் பணியாட்டொகுதிக்கும் மாணவர்களுக்கும் ஏற்புடைத்தான ஒழுக்காற்று விதிகளும் நடைமுறைகளும் கற்கைப்பிரிவின் பணியாட்டொகுதிக்கும் மாணவர்களுக்கும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

25. கற்கைப்பிரிவு பட்டதாரி மாணவர்களுக்காக உள்வாரி மாணவர் சங்கமொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். சட்டத்தின் பாகம் XIV இன் ஏற்பாடுகள் கற்கைப்பிரிவு மாணவர் சங்கத்திற்கும் அது தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

26. சட்டத்தின் பாகம் XIX இன் ஏற்பாடுக் கற்கைப்பிரிவால் ஆக்கப்படும் துணை விதிகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் அவை தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

27. (1) காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 14.09.1987 ஆந் திகதிய 471/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் கணனி தொழில்நுட்பவியல் நிறுவகத்தைத் தாபித்து வெளியிடப்பட்ட சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையும் 21.09.1997 ஆந் திகதிய 472/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1987 ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க கணனி தொழில்நுட்பவியல் நிறுவக கட்டளைச் சட்டமும் விடத்திற்கேற்ப அத்தகைய கட்டளையின் கீழும் கட்டளைச் சட்டத்தின்கீழும் ஏற்கனவே செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் நீக்கப்படுகின்றன.

(2) கற்கைப்பிரிவைத் தாபிக்கும் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழான கட்டளை நடைமுறைக்கு வருவதன் மீது, கற்கைப்பிரிவு தொடர்பில் பின்வரும் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.-

(அ) (இதனகத்துப்பின்னர் 'நிறுவகம்' எனக் குறிப்பீடுசெய்யப்படும் கணனி தொழில்நுட்பவியல் நிறுவகத்திலும் (இதனகத்துப்பின்னர் 'பகுதி' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானத்துறையின் கணனி அறிவியல் பகுதியினதும் எல்லா மாணவர்களும் கற்கைப்பிரிவைத் தாபிக்கும் கட்டளையின் திகதிக்கு முற்போந்த நாளன்று கற்கைப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய மாணவர் ஒவ்வொருவரும் அத்தகைய நிறுவகத்தின் அல்லது பகுதியின் மாணவர்களாக அனுபவிக்கப்படும் வசதிகளையும் சிறப்புரிமைகளையும் அனுபவித்தல் வேண்டும்.

(ஆ) நிறுவகத்தினதும் பகுதியினதும் சேவையிலுள்ள எல்லா ஆசிரியர்களும் அலுவலர்களும் வேறு ஊழியர்களும் கற்கைப்பிரிவிலுள்ள ஆசிரியர்களாகவும் அலுவலர்களாகவும் வேறு ஊழியர்களாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், விடயத்திற்கேற்ப ஆணைக்குழு அல்லது பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடியவாறு பதவியுயர்வுகள் சம்பளங்கள் அல்லது ஊதியங்கள், தொழிலை முடிவுறுத்துதல், படிகள் அல்லது வேறு நலன்கள் தொடர்பிலான நியதிகள் உட்பட நிறுவகத்தினதும் பகுதியினதும் சேவையில் அவர்களுக்கிருந்த அல்லது அவர்கள் அனுபவித்த ஏறக்குறைய அதே அந்தஸ்துடனும் அதே நியதிகளுடனும் அவர்களது பதவிகளை வகித்தல் வேண்டும்

(இ) இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் நிறுவகத்தால், நிறுவகத்துடன் அல்லது நிறுவகத்திற்காக செய்யப்பட்ட எல்லாத் தகைமைகளும் கடப்பாடுகளும் பொறுப்புகளும் அத்துடன் நிறைவேற்றப்பட்ட அல்லது செய்துகொள்ளப்பட்ட எல்லா ஒப்பந்தங்களும் உறுதிகளும் முறிகளும் வேறு சாதனங்களும் அத்துடன் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்ட எல்லாக் கருமங்களும் விடயங்களும் இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் செய்யப்பட்டுள்ளதாக, நிறைவேற்றப்பட்டுள்ளதாக, செய்துகொள்ளப்பட்டுள்ளதாக அல்லது செய்யப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக கருதப்படல் வேண்டும்.

(ஈ) கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு முன்னர் நிறுவகத்தால் அல்லது பகுதியால் அல்லது நிறுவகத்திற்கு அல்லது பகுதிக்கு எதிராகத் தொடரப்பட்ட ஏதேனும் குடியியல் அல்லது குற்றவியல் குற்றவழக்குத் தொடர்ச்சி மேன்முறையீடு அல்லது வேறு சட்ட நடவடிக்கை கற்கைப்பிரிவால் அல்லது கற்கைப்பிரிவுக்கு எதிராகத் தொடரப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்கத் தொடர்ந்து மேற்கொள்ளப்படுதலும் வேண்டும்.

(உ) இக்கட்டளைச்சட்டம் நடைமுறைக்கு வரும்திகதியன்று நிறுவகத்தின் அல்லது பகுதியின் உடைமையில் உள்ளவாறு அதற்கென நம்பிக்கைப் பொறுப்பில் வைத்திருக்கப்படுகின்றதும் நிறுவகத்திற்கு அல்லது பகுதிக்கு உரித்தாக்கப்பட்டதும் அல்லது சட்டமுறையாகக் கொள்வனவு செய்யப்பட்டதும் அல்லது கொள்ளப்பட்டதும் அல்லது அதற்கு குத்தகைக்கு விடப்பட்டதும் அல்லது அதன்வசம் வைக்கப்பட்டதும் அல்லது வேறு முறையில் அதற்கு கைமாற்றப்பட்டதுமான எல்லா அசைவுள்ள, அசைவற்ற ஆதனமும் கற்கைப்பிரிவால் அல்லது அதற்காக நம்பிக்கைப்பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

28. கற்கைப்பிரிவின் ஏதேனும் அதிகாரசபையின் அல்லது வேறு குழுவின் செயல், தீர்மானம் அல்லது நடவடிக்கை எதுவும் அதன் உறுப்பினர்களிடையே வெற்றிடமொன்று அல்லது வெற்றிடங்கள் இருப்பதன் காரணமாக அல்லது அத்தகைய உறுப்பினர்களின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு அல்லது எவையேனும் குறைபாடுகள் இருப்பதன் காரணமாக மாத்திரம் செல்லுபடியற்றதாக்கப்படுதலாகாது.

29. இக்கட்டளைச் சட்டத்தின்கீழ் ஏற்பாடுசெய்யப்படாதா எவையேனும் எதிர்பாரா சம்பவங்களைத் தீர்ப்பதற்கு பல்கலைக்கழகத்தின் விதப்புரையின்மீது நடவடிக்கை எடுப்பதற்கான தத்துவம் ஆணைக்குழுவுக்கிருத்தல் வேண்டும்.

30. இக்கட்டளைச் சட்டத்தில்-

"சட்டம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க. பல்கலைக்கழகங்கள் சட்டம் எனப் பொருள்படும்.

"தோதான சாதனம்" என்பது, சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆசிரியர்" என்பது சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு" என்பது 1978 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, பல்லைக்கழக சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எனப்பொருள்படும்.

"துணைவிதிகள்" என்பது சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட துணைவிதிகள் என்று பொருள்படும் ;

"உயர் கல்வி நிறுவனம்" என்பது எந்த நிறுவனம் தொடர்பில் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் கட்டளை ஒன்று ஆக்கப்பட்டுள்ளதோ அந்நிறுவனம் எனப் பொருள்படும்.

11-1412

---

## திருத்தம்

2002, ஒகத்து 21 ஆந் தேதிய 1250/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ (1) என்னும் பிரிவின்கீழான அறிவித்தலின் (2) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "கொழும்பு பல்கலைக்கழக கணனிப் பாடசாலை" என்பதற்கு பதிலாக "கொழும்பு பல்கலைக்கழக கணனி கற்கைப் பிரிவு" என்பதை இடுவதன்மூலம் திருத்தம் செய்யப்படுகின்றது.

கபீர் ஹசீம்,
மூன்றாம் நிலைக் கல்வி பயிற்சி அமைச்சர்.

கொழும்பு,
2002.11.14.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.